## எங்களுடைய நோக்கம்

நோயற்ற மனங்கள் = ஒரு வலிமைவாய்ந்த, ஆரோக்கியமான பல்கலாசார சமூகம்

## எங்களுடைய குறிக்கோள்

ஒத்துழைப்பு மூலம் எங்களுடைய பல்வேறு வகைப்பட்ட சமூகத்தில் அனைவருக்கும், புதுமையான பல்கலாசார மனநல மேம்பாட்டிற்கு வழிகாட்டுதலும், ஆரோக்கியமான மனங்களையும் நன்னிலைகளையும் முயன்று பெறுதலும்

Metro South Addiction and Mental Health Services

## தொடர்பு கொள்ள


விலாசம்
Floor 1, 519 Kessels Road
MacGregor Qld 4109

தொலைபேசி
07 3167 8333 (பிரிஸ்பன் பெருநகர் பகுதி)
1800 188 189 (பிரிஸ்பன் பெருநகர் பகுதிக்கு வெளியே)

தொலைநகல்
07 3167 8322

**மின்னஞ்சல்**
qtmhc@health.qld.gov.au

**வலைத்தளம்**
www.health.qld.gov.au/metrosouthmentalhealth/qtmhc


**திறப்பு நேரம்**
திங்கட்கிழமை – வெள்ளிக்கிழமை
8.30முப – 5.00பிப

Metro South Health

Metro South Addiction and Mental Health Services

# குயின்ஸ்லாந்து பல்கலாசார மன ஆரோக்கிய நிலையம்

பண்பாடு மற்றும் மொழி ரீதியாக பலவகைப்பட்ட பின்னணிகளிலிருந்து வரும் மக்களுக்காக மாநிலம் முழுவதும் அளிக்கப்படும் சேவை

TAMIL

Great state. Great opportunity.

Queensland Government

# Queensland Transcultural Mental Health Centre (QTMHC)

## குயின்ஸ்லாந்து பல்வேறு பண்பாடுகளைச் சார்ந்த மக்களுக்கான மனநல நிலையம் என்பது என்ன (QTMHC)?

குயின்ஸ்லாந்து பல்வேறு பண்பாடுகளைச் சார்ந்த மக்களுக்கான மனநல நிலையம் எல்லா வயதுக் குழுவினரையும் உள்ளடக்கி சிக்கலான மனம் சார்ந்த நலப்பிரச்சனைகள் மீது கவனம் செலுத்தி மற்றும் பராமரிப்பைத் தொடர்ந்து பண்பாடு சார்ந்த (QTMHC)ஆக்கபூர்வமான முறையில் எதிர்வினையாற்றுகின்ற மனநல பராமரிப்பை எளிதாக்குவதற்காக(CALD) பண்பாடு மற்றும் மொழி ரீதியாக பலவிதமான தனிநபர்கள்,குடும்பங்கள், சமூகங்கள், மற்றும் அமைப்புகள் ஆகியவற்றிற்கு மாநிலம் முழுவதுமாக சிறப்பான சேவைகளை வழங்குகின்றது.

மருத்துவமனை மற்றும் பண்பாடு சார்ந்த கலந்தாய்வு சேவைகள் மற்றும் தகவல்கள் வளங்கள் மருத்துவமனை சார்ந்த மற்றும் சமூகக்கல்வி மற்றும் மனநலம் சார்ந்த வளர்ச்சி தடைசெய்தல் மற்றும் முன்பே தலையிடுதல் திட்டங்கள் மூலமாக இவற்றை QTMHC இயலக்கூடிய தாக்குகின்றது.

## வழங்கப்படும் சேவைகள்

### மருத்துவம் சார்ந்த கலந்தாய்வுச்சேவை

மருத்துவம் சார்ந்த நிபுணர்கள் மற்றும் 100க்கு மேற்பட்ட மொழிகள் மற்றும் பண்பாட்டுக் குழுக்களை உள்ளடக்கிய இரு மொழிகளைப் பயன்படுத்துகிற மனநல ஆலோசகர்கள் மூலமாகQTMHC மருத்துவம் சார்ந்த நிபுணர்கள் கலந்தாய்வுச் சேவையை வழங்குகிறது.

இந்தச்சேவை மனநலம் சார்ந்த வழங்குநர்களுக்கும் நுகவோர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் நிபுணர்கள் மதிப்பீடு, குறுகியகால தலையீட்டுடன் தகவலும், அறிவுரைகளும் பரிந்துரைகளும் விருப்பத் தேர்வுகளையும் வழங்குகிறது.

### நூலகமும் பல்வேறு மொழிகளைச் சார்ந்த துணைவளங்களும்

பல்வேறு பண்பாடுகளைக் கொண்ட மக்கள் தொடர்பான மனநலம் சார்ந்த சுகாதார தலைப்புப் பொருள்களுடன், பல வகையான மனம் நலம் சார்ந்த சுகாதாரப் பிரச்சனைகள் பற்றிய மொழி பெயர்க்கப்பட்ட தகவல்கள் கொண்ட விரிவான வளங்கள் கொண்ட நூலகம் QTMHC இடம் உள்ளது.

### மனநல வளர்ச்சியும், தடை செய்தலும் முன்பாகத் தலையிடுதலும்

பல்வேறு பண்பாடுகளைக் கொண்ட சமூகங்களிடையே உள்ள நியாயமற்ற நம்பிக்கைகளைக் குறைப்பதற்கும் மனம் நலம் சார்ந்த கல்வி அறிவையும் விளைவுகளைக் கையாள வல்ல உறுதியை அதிகரிப்பதற்கும் QTMHC பல்வேறு அமைப்புக்களுடன் உறவு கொண்டு பல வகைப்பட்ட திட்டங்களையும் செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்கின்றது.

### மாநிலம் முழுவதும் பல்வேறு பண்பாடுகளைச் சார்ந்த மக்களுக்கான மனநல ஒருங்கிணைப்பாளர்கள் திட்டம் *(MMHC)*

நுகர்வோர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் பொருத்தமான மனநல பராமரிப்பையும் உள்ளூர் பல பண்பாட்டுக் குழுக்களுடள் ஒத்திசைவு கொண்டு இவற்றை எளிதாக்குவதைக் கருத்தில் கொண்டு MMHCன் இருப்பு நிலைமூலமாக QTMHC மாநிலம் முழுவதும் உள்ள மருத்துவ மனைகள் மற்றும் சுகாதார சேவைகள் ஆகியவற்றில் உள்ள மனநல சேவைகளுடன் பங்காண்மை கொண்டு செயல் புரிகின்றது

### நுகர்வோர் மற்றும் பேணுநர் பங்கேற்றல்

QTMHC திட்டங்கள், சேவைகளுடன் பரந்த கொள்கைகள் மற்றும் திட்டங்கள்ஆகியவற்றுள் உள்ளீடு செய்யும் தகவல்களை உறுதி செய்வதற்காக பண்பாடு மற்றும் மொழி ரீதியான பல்வேறு பின்னணியிலிருந்து வரும் நுகர்வோர்களுடனும் பேணுநர்களுடனும் QTMHC இணைந்து பணி புரிகின்றது.

### கொள்கை மற்றும் சேவை உருவாக்கம்

மாநில மற்றும் மத்திய அரசு மட்டங்களில் மனநலம் மற்றும் அதனுடன் தொடர்புள்ள கூறுகள் தொடர்பாக கொள்கை மற்றும் சேவை உருவாக்கம் ஆகியவற்றில் QTMHC க்கு தொடர்கிற முக்கியம் வாய்ந்த பங்கு உள்ளது

### ஆய்வு

பல் கலாச்சாரங்கள் சார்ந்த மனநலச் சான்று ஆதாரங்களை மேலும் வளரச் செய்யவும், பங்குகொண்டு உதவி செய்யவும் QTMHC,கூட்டாகச் செயலாற்றும் கூட்டுத் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கின்றது.

### கல்வியும் வளர்ச்சியும்

மனநலப் பணியாளர்களுடைய பண்பாடு சார்ந்த திறமைகளை உருவாக்குவதிலும், பல் பண்பாடுகளைச் சார்ந்த அமைப்புகளிடையேயும், குழுக்களிடமும் மனநலக் கல்வி அறிவை வளர்ப்பதிலும் , இந்தக் கல்வித் திட்டங்கள் கவனம் முழுவதையும் செலுத்துகின்றன.

## கீழே குறிப்பிட்டன தொடர்பாக, எங்களால் உங்களுக்கு உதவி செய்ய முடியும்:

- ஒரு நுகர்வோருக்கு மற்றும் / அல்லது அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு பண்பாட்டுக்குப் பொருத்தமான மதிப்பீடு மற்றும் / அல்லது உளம் சார்ந்த கல்வி ஆகியவற்றை ஏற்பாடு செய்ய விரும்பினால்
- உங்கள்பணியாளர்களுக்கு பல் கலாச்சாரம் சாரந்த மனநலப் பயிற்சி தேவப்பட்டால்
- நீங்கள் தற்சமயம் பணிபுரியும் நுகர்வோர் அல்லது பண்பாடு சார்ந்த குழு சம்பந்தமான குறிப்பிட்ட பண்பாட்டுத் தகவல்கள் தேவைப்பட்டால்
- உங்கள் சமூகத்தில் உள்ள குறிப்பிட்ட மனநலப் பிரச்சனை சம்பந்தமாக ஒரு கருத்தரங்கை ஏற்படுத்த விரும்பினால்
- பல் பண்பாடு சார்ந்த மனநலப் பிரச்சனைகள் பற்றிய புத்தகங்கள், கட்டுரைகள் மற்றும் வளங்கள் தேவைப்பட்சால்
- பல் பண்பாட்டுச் சேவைகளிடையே உருவாக்கப் பிரச்சனைகள் குறித்து அறிவுரைகள் தேவைப்பட்டால்.